**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 179 of 2024

DATE :30.09.2025

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | **கார்த்திக்** | Caste | |
| Father/Husband's Name | முத்தையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2025

**(1, 4 முதல் 8 எதிரிகள் ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. வெள்ளைச்சாமி ஆஜர். )**

**முதல் விசாரணை : –**

1) நான் மகாராஜபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளையும் மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். மகாராஜபுரம் அம்மா பூங்கா அருகே 35 வருடங்களுக்கு முன்பு சுகுணா என்பவர் வாங்கியிருந்தார். அதன் பின்பு திருத்தங்களைச் சேர்ந்த மாரியப்பன் வாங்கி இருந்தார்.இது சம்பந்தமாக திருவல்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். 7 வது எதிரி அவருடைய கொழுந்தியாள் லிங்கம்மாள் என்பவருக்கு தாவா இடத்தில் உள்ள 50 சென்ட் நிலத்தை கிரயம் கொடுத்து விட்டார். பின்னர் இது குறித்து 7 வது எதிரியிடம் நான் கேட்டதற்கு என்னை தேவடியா மகனே, கூதி மவனே என்று தகாத வார்த்தையால் பேசி, எனது சட்டையை பிடித்து இழுத்து, 1 வது எதிரி போன் செய்து சுந்தர்ராஜ், மனோகரன், சுந்தர்ராஜ் மகன்கள் இரண்டு பேர் ஆகியோர்களை வரச் சொன்னார். எதிரி மனோகரன் கம்பால் எனது தலையில் தாக்கி ரத்த காயத்தை ஏற்படுத்தினார். 2 வது எதிரி அருண்குமார் இடது கை சுண்டு விரலில்

அடித்தார். எதிரி சுந்தர்ராஜ் கம்பை வைத்து வலது முழங்காலில் அடித்தார். 3 வது எதிரி கம்பால் அடித்தார். அதை தடுக்க வந்த எனது சித்தப்பா பெருமாள் என்பவரை அருவாளால் எதிரி குமார் என்பவர் தாக்கி காயப்படுத்தினார். எனது மனைவியை 8 வது எதிரி ஜெயலட்சுமி கம்பால் இடது காலில் அடித்தார். பின்னர் சம்பவ இடத்திலிருந்து காயத்தோடு கிளம்ப முற்படும்பொழுது எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொலை மிரட்டல் விடுத்தார்கள். அந்த வழியாக வந்த சந்தானம் என்பவர் அவர் வந்த இருசக்கர வாகனத்தில் எங்களை ஏற்றிக்கொண்டு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். இது சம்பந்தமாக கடந்த 16.08.2020 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு எழுத படிக்க தெரியும். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக பல வருடங்களாக முன்பகை இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. சொத்தை முறைகேடாக கிரயம் செய்தது சம்பந்தமாக சம்பந்தமாக பஜாரில் வைத்து கேட்கும் பொழுது தான் சண்டை ஏற்பட்டது. சம்பவம் நடைபெற்ற உடனே நான் மருத்துவமனைக்கு சென்று விட்டேனா என்றால் காவல் நிலையத்திற்கு சென்று விட்டு தான் மருத்துவமனைக்கு சென்றேன். நான் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றால் சுமார் 7 மணி இருக்கும். சம்பவம் பஜாரில் வைத்து 05.15 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான்.

நான் சொல்லக்கூடிய நேரத்தில் பஜாரில் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திலிருந்து வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கோ அல்லது காவல் நிலையத்திற்கோ ஏதேனும் வாகனத்தில் வந்தால் அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். அன்றைய தினம் கொரோனா காலகட்டம் மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகும். சம்பவம் நடைபெற்ற நாளில் நான் மருத்துவமனைக்கு எனது உறவினரின் இருசக்கர

வாகனத்தில் வந்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் சொல்ல சொல்ல காவலர்கள் புகார் மனுவை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்ல சொல்ல எனது மனைவி எழுதிக் கொண்டார். காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் எனது மனைவியும் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான். வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேரும்பொழுது மருத்துவரிடம் அன்றைய தினம் நடந்த சம்பவம் குறித்து தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன்.

நான் மருத்துவமனைக்கு செல்லும் பொழுது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் 06.45 முதல் 07.00 மணி இருக்கும். நான் வீட்டில் இருந்தே எனது மனைவியை வைத்து புகாரை எழுதி எடுத்துக்கொண்டு வந்தேன் என்றால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு அழைத்து வந்த சந்தானம் என்பவர் சம்பவம் நடைபெற்ற பின்னர் தான் சம்பவயிடம் வழியாக வந்தார் என்றால் கூட்டமாக இருப்பதை தெரிந்து கொண்டு சம்பவ இடத்திற்கு வந்தார். சந்தானம் எனக்கு உறவினர் என்றால் சரிதான். எனது சித்தப்பாவை எதிரிகள் அருவாளால் தாக்கியதாக சொல்லி உள்ள நிலையில் அந்த அருவாள் என்ன வகையில் இருந்தது என்றால் அதன் கைப்பிடி மரத்தால் ஆனது. வீட்டில் சாதாரணமாக பயன்படுத்தக்கூடிய அருவாள் தன்மையைச் சார்ந்தது. சாட்சிகள் கிருஷ்ணம்மாள் மற்றும் மாரிக்கனி எனக்கு என்ன உறவு முறை என்றால் கிருஷ்ணம்மாள் எனக்கு யார் என்றே தெரியாது. மாரிக்கனி எனக்கு அத்தை உறவுமுறை ஆவார்.

என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவை எழுதிய கையெழுத்து என் மனைவியினுடைய கையெழுத்து என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லும் பொழுது சுயநினைவோடுதான் இருந்தேன் என்றால் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. மருத்துவரிடம் என்னை 7 ஆண்கள் மற்றும் 1 பெண் தாக்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் வழக்கு சம்பவத்தை பற்றி சொல்லும் பொழுது எனது சித்தப்பாவை அருவாளால் தாக்கிய விஷயத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற இடத்தில் என்னுடன் எனது சார்பாக வேறு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் வேறு யாரும் இல்லை நான் மட்டும் தான் இருந்தேன். நானும் வழக்கின் எதிரிகளும் மற்ற பொது மக்களும் அங்கே கூடி இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகே

கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் சரிதான். கண்காணிப்பு கேமரா காட்சி பதிவுகளை பார்வையிட்டால் வழக்கில் என்ன நடந்தது என்ற உண்மை சம்பவம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் சரிதான். இடி விழுந்ததால் கடைக்காரர் கண்காணிப்பு கேமராவை அனைத்து வைத்துவிட்டார். மேற்படி கடையின் உரிமையாளரை அழைத்து விசாரணை செய்தால் கண்காணிப்பு கேமராவை அனைத்து வைத்த விபரம் தெரியவரும் என்றால் சரிதான். கண்காணிப்பு கேமராவை அனைத்து வைத்த விபரம் எனக்கு எவ்வாறு தெரியவரும் என்றால் போலீசார் விசாரணையின் போது கடை உரிமையாளர் தெரிவித்தார் அதன் மூலம் எனக்கும் தெரியும்.

பிரகாஷ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு தம்பி உறவு முறை ஆவார். இதே வழக்கு சம்பவத்தின் தொடர்ச்சியாக பிரகாஷ் என்பவரால் எனக்கு முன்னால் ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு தொடர்ந்து அது இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் குற்ற எண் 634/2020 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்பு தான் நான் இந்த வழக்கின் எதிரிகள் மீது காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக எனக்கும் எதிரிகளுக்கும் நீண்ட காலமாக முன் விரோதம் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. என்னையும் எனது உறவினர்களையும் கல் மற்றும் கம்பை வைத்து தாக்கியதாக வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னை யாரும் தகாத வார்த்தையால் பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்த அன்றைய தினமே நான் கொடுத்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் கொரோனா காலகட்டம் என்பதால் தினந்தோறும் சென்று சென்று வந்தேன். எனக்கும் எனது உறவினருக்கும் எதிரிகளால் காயம் ஏற்பட்டதாக சொல்லி உள்ளது உண்மையல்ல என்றும் வழக்கிற்காக நாங்களே ஏற்படுத்திக் கொண்டு எதிரிகள் ஏற்படுத்தியதாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வழக்கின் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சொத்து சம்பந்தமாக எங்களுக்கிடையே இருந்துவரும் பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு பொய்யாக ஒரு புகார் மனு கொடுத்துவிட்டு அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்பு அதை வழக்கு சொத்து சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் பேசி தீர்த்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 179 of 2024

DATE :30.09.2025

Depositions of witness for Prosecution

PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name | **கவிதா** | Caste | |
| Father/Husband's Name | **கார்த்திக்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2025

**(1, 4 முதல் 8 எதிரிகள் ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. வெள்ளைச்சாமி ஆஜர். )**

**முதல் விசாரணை : –**

1) நான் மகாராஜபுரத்தில் வசித்து வருகிறேன். நான் குடும்பத் தலைவியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். வழக்கின் ஆஜர் எதிரிகளையும் மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். 16.08.2020 அன்று மாலை 05.30 மணிக்கு மகாராஜபுரம் மேல தெருவில் உள்ள சந்திரன் டீக்கடைக்கு முன்பு வைத்து எனது கணவருக்கும் எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. சத்தம் கேட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்ற பொழுது சுந்தர்ராஜ் கம்பை வைத்து எனது கணவரை தலையில் அடித்தார். அருண்குமார் கம்பை வைத்து வலது காலில் அடித்தார். திருக்குமரன் கம்பால் இடது கையில் அடித்தார். காயம் பட்ட எனது கணவரை ஆட்டோவில் ஏற்றும் பொழுது எதிரிகள் ஆட்டோவில் ஏறக்கூடாது என்று வழிமறித்து ஆட்டோ டிரைவரை மிரட்டி விட்டார்கள். சுந்தர்ராஜிடம் ஏன் எனது கணவரை ரத்தம் வரும் வரை அடித்தீர்கள் என்று கேட்டதற்கு அவர் கையில் வைத்திருந்த கம்பை 8 வது எதிரி

ஜெயலட்சுமி பிடுங்கிக் கொண்டு எனது இடது காலில் அடித்தார். காயம்பட்ட எனது கணவரை வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட புகாரை யார் எழுதியது என்றால் எனது கணவர் தான் எழுதினார். எனது கணவர் எழுதிய புகாரில் நான் கையெழுத்து எதுவும் செய்தேனா என்றால் கையெழுத்து செய்தேன். எனது ஊரில் பஜார் என்ற இடமும், சந்திரன் டீ கடை அமைந்திருக்கும் இடமும் வேறு வேறு இடம் என்றால் சரிதான். எனது கணவருக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் இடையே சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் சந்திரன் டீக்கடை முன்பு தான் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் சத்தம் கேட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு என்ன நடந்தது என்றும், எனது கணவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற உடனே வத்திராயிருப்பு காவல் நிலையத்திற்கு வந்து விட்டோம் என்றால் சரிதான்.

என்னையும் எனது கணவரையும் எதிரிகள் கம்பால் தாக்கியதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகள் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்து வரும் சொத்து பிரச்சனையின் முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆட்டோ டிரைவரை விரட்டியதாக வழக்குக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற பின்பு போலீஸார்கள் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்ற மறுநாள் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவம் நடைபெற்ற உடனே காவல் நிலையத்திற்கு சென்று விட்டு மருத்துவமனைக்கு சென்று விட்டோம் என்றால் சரிதான்.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு